**கந்தளாய் பிரதேச சபை**

**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 19 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கோமரங்கடவல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட நகர சபை மண்டபத்தின் பெறுமதி ரூபா 70,671,580 ஆன போதிலும், அது ரூபா 72,000,000 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் கட்டிடங்கள் ரூபா 1,328,420 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 267,124 ஆக காணப்பட்ட போதிலும், அது ரூபா 204,960 ஆக காண்பிக்கப்பட்டமையால் நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 62,164 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய பிடிகாசு ரூபா 7,903,352 ஆன போதிலும், அது ரூபா 7,874,938 ஆக காண்பிக்கப்பட்டமையால் நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 28,414 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காமைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி 59 | ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் சபையில் அதிகாரப் பிரதேசத்தில் உள்ள வியாபார மற்றும் கைத்தொழில்கள் தொடர்பான மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396 | வழங்கப்பட்டு 06 மாதங்களை விஞ்சியிருந்த கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 348,336 பெறுமதியான 17 காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான 13 வாகனங்களில் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,878,731 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,959,735 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2017<br>--------<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016<br>--------<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 |
| (i) | வீதவரியும் வரியும் | 4,300 | 3,759 | 3,830 | 9,471 | 2,800 | 3,607 | 2,708 | 9,563 |
| (ii) | வாடகை | 15,625 | 4,976 | 8,294 | 2,881 | 7,730 | 6,512 | 2,766 | 1,959 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,851 | 5,051 | 1,080 | - | 1,103 | 915 | 750 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 8,160 | 12,070 | 6,891 | 10,906 | 8,556 | 1,95 | 6,471 | 6,585 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

வீதவரி பிரிவுகள் 07 இற்குரிய நிலுவை வீதவரி ரூபா 10,009,718 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வாடகை

பெற வேண்டிய கடை வாடகை ரூபா 1,917,004 தொகை சுமார் 07 வருடங்களுக்கு அண்மிய காலமாக நிலுவையாக காணப்பட்டதுடன், அந்த நிலுவை வாடகையை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 முத்திரைக் கட்டணம்

கிழக்கு மாகாண சபையின் தலைமை செயலாளரின் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய முத்திரைக் கட்டணமாக பெற வேண்டிய பணத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்தல், மக்களின் சுகவாழ்வு, வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகளை விதிக்க வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 11 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் இலக்கம் 01/2014 இன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் மாதாந்தம் 150 டொன்கள் அளவான கழிவுகள் அகற்றப்படுவதுடன், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரைகளுக்கமைய கழிவுகளை அகற்றப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அந்த பிரதேசத்தில் உலாவும் காட்டு விலங்குகள் உட்கொள்ளல் உள்ளடங்கலான பல்வேறு சுற்றாடல் பிரச்சினைகள் உருவாகியிருந்தன. எவ்வாறெனினும், கழிவு முகாமைத்துவத்திற்காக மஹாவலி அதிகாரசபையினால் சுமார் 12 ½ ஏக்கர்கள் அளவான காணியொன்று சூரியபுர பிரதேசத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த போதிலும், காட்டு விலங்குகளுக்கு உருவாகியுள்ள அச்சுறுத்தலை அகற்றும் பொருட்டு பிரதேசத்தை சுற்றிலும் மின்சார வேலியொன்று பொருத்தப்பட்டு முறையாக குப்பைகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரையிலும் நடைமுறை செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) சுற்றாடல் பிரச்சினைகள்**

1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 ‘‘அ’’ பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் அழிவு ஏற்படும் அரிசி ஆலைகள், தச்சு கைத்தொழில், கராஜ் மற்றும் சீமெந்துடன் தொடர்புடைய உற்பத்தி நிறுவனங்கள் போன்ற முயற்சிகள் நடைமுறைப்படுத்தும் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் நடைமுறைப்படுத்தப்படும் அவ்வாறான 84 முயற்சிகள் அவ்வாறான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளாது தொழிற்சாலை நடாத்திச் செல்லப்பட்டவாறு இருந்தது. இது தொடர்பில் ஏற்படக்கூடிய கூற்றாடல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

சபையினால் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அது தொடர்பான அளவீடுகள் இனங்காணப்பட்டிருக்காததுடன், அது தொடர்பான போதியளவான அறிவொன்று இல்லாதிருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான 13 வாகனங்களுக்காக நடப்பாண்டிற்கு வருமான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

(ஆ) 1993 நவம்பர் 18 ஆந் திகதிய நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வெளியிடப்பட்டுள்ள திட்டங்கள் சுற்றறிக்கை இலக்கம் 15 இன் பிரகாரம் அத்துமீறிய நிர்மாணங்களுக்கான சேவைக் கட்டணத்தை அறவிடல் இலங்கை வங்கியில் அல்லது

மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கொன்று திறக்கப்பட்டு அதற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் ரூபா 1,084,980 தொகை பொதுக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

--------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள சேவையைக் கைவிட்டுச் சென்ற மற்றும் சேவையிலிருந்து அகற்றப்பட்ட இரு ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 1,117,824 தொகை தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ)

(i) சாரதி, காவலாளர் மற்றும் வாசிகசாலை உதவியாளர் பதவிகளுக்கு 06 ஊழியர்களின் மிகையொன்று காணப்பட்டது.

(ii) அபிவிருத்தி உத்தியோகத்தர், வருமான பரிசோதகர், இயந்திர இயக்குனர் மற்றும் பணிப் பரிசோதகர் பதவிகளில் 06 ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொது சந்தையின் மேல் மாடிக்கு பிரவேசித்தல் கடினமாக இருந்தமை மற்றும் அந்த கடைகளின் மாதாந்த வாடகை உயர்வான பெறுமதியொன்றினை கொண்டிருந்தமை போன்ற விடயங்களின் காரணமாக 25 கடைகள் வாடகைக்கு வழங்க முடியாது விளைவற்றுக் காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் மொத்தமாக ரூபா 900,000 தொகைக்கு அண்மிய வருமானமொன்று சபைக்கு இழப்பாகியிருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்கான பொதுச் சந்தையில் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள 25 கடைகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக எதிர்காலத்தில் நிலுவைப் பணத்தை அறவிடும் போது சிக்கலான நிலைமையொன்று உருவாகக் கூடியதாக இருந்தது.

(இ) அக்போபுர நூல் நிலையத்திற்கு புதிய புத்தகங்கள் இல்லாதிருந்தமை அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் சுத்தகரிப்பு வசதிகள் இல்லாதிருந்தமை காரணத்தால் நூலகத்தின் ஆக்கபூர்வமான சேவையொன்றினை பிரதேசத்தின் மக்களுக்கு முடியாதிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### (அ) குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதரிக்கப்படுகின்றன.

(i) சபைக்கு சொந்தமான 03 வாகனங்கள் செயலற்ற நிலையில் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வாகனங்களை பழுதுபார்ப்பதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் 2018 ஆகஸ்ட் மாதம் வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் அனுசரணையுடன் 2014 ஆம் ஆண்டு முதல் பேணிச் செல்லப்பட்டிருந்த நெசனல கணனி நிலையம் 2015 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிலையத்திலுள்ள கணனி, தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் விளைவற்றதாக காணப்பட்டதுடன், கிராமப்புறங்களில் பிள்ளைகளுக்கு தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவினை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளாமை

2018 மார்ச் 27 ஆந் திகதிய வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பரிந்துரைகளுக்கடைய 09 பொருள் வகைகளை பழுதுபார்ப்பதற்கு, 34 பொருள் வகைகளை விற்பனை செய்வதற்கு மற்றும் 28 பொருட்கள் மற்றும் 77 புத்தகங்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 பெறுகைகள்

#### 3.6.1 பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.6.2 சமூக அமைப்புகளுக்கு ஒப்பந்தங்களை கையளித்தல்

2013 யூலை 26 ஆந் திகதிய FC/3/3/2013 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் சமூக அடிப்படை அமைப்புக்களுக்காக வழங்கப்படக்கூடிய உச்ச ஒப்பந்த பெறுமதி ரூபா 2,000,000 ஆன போதிலும், 04 சமூக அமைப்புக்களுக்கு சுற்றறிக்கைகளுக்கு முரணாக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

#### 3.6.3 பிரதேச சபைகளை பலப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

2016 ஆம் ஆண்டின் போது சபையினால் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 1,528,508 கூட்டுத்தொகையான மதிப்பீட்டுப் பெறுமதியுடைய, 93 சந்தியின் வாரச் சந்தையை புனரமைத்தல் மற்றும் கந்தளாய் குளக் கட்டின் அருகில் உள்ள பொதுமலசல கூடத்தினை புனரமைக்கும் செயற்திட்டம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 93 ஆம் வாரச் சந்தையினை புனரமைப்பதற்காக சமூக அமைப்புக்களுக்கு 2016 ஆகஸ்ட் 10 ஆந் திகதி ரூபா 999,224 பெறுமதியினை ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. சமூக அமைப்புக்களுக்கு ரூபா 436,074 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரையிலும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கந்தளாய் குளத்தினை பார்வையிடுவதற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் சுத்தகரிப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் குளக்கட்டின் அருகில் பொதுமலசலகூடத்தினை புனரமைப்பதற்காக ரூபா 529,284 ஆன மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நீர் வசதியினை பெற்றுக்கொள்ளல் மற்றும் மலசலகூடத்தின் உட்புறத்தினை பூர்த்தி செய்தல் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 4 சதவீதம் முதல் 214 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் நிலவின. அதற்கமைய வருடாந்த பாதீடானது சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமையும் கட்டுப்பாடும்

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) சொத்துக்கள் கணக்கு வைப்பதில் குறைபாடுகள் நிலவுகின்றமை.<br>(ii) பயன்பாட்டு பேரேடுகள் பேணப்பட்டிராமை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | நிலுவை வருமானம் அறவிடப்படாமை. |
| (இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிராமை.<br>(ii) விளைவற்ற சொத்துக்களை பயனுள்ள பணிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) ஒப்பந்த நிர்வாகம் | ஒப்பந்தங்களுக்கமைய பணிகளை நிறைவேற்றிய பின்னர் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல். |
| (உ) மனிதவள முகாமைத்துவம் | மிகைப் பதவியணியினர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தமை. |